සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved ]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2023(2024)
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2023(2024)
General Certificate of Education (Adv. Level) Examination, 2023(2024)

| | | | |
|---|---|---|---|
| යුරෝපා ඉතිහාසය | II | (II කොටස) | **25 B** **T** **II** |
| ஐரோப்பிய வரலாறு | II | (பகுதி II) | |
| History of Europe | II | (Part II) | |

ஐரோப்பிய வரலாறு - கிரேக்க - உரோம காலம் முதல் கி.பி. **1989** வரை

**அறிவுறுத்தல்கள் :**

* நான்கு வினாக்களுக்கு விடையளிக்கப்பட வேண்டும்.
* பகுதி **II** ஆனது **A, B, C** ஆகிய **மூன்று** பகுதிகளைக் கொண்டது.
* பகுதி **A** இன் வினா கட்டாயமானது.
* பகுதி **B, C** ஆகிய ஒவ்வொரு பகுதியிலிருந்தும் **ஒரு** வினாவையேனும் தெரிவுசெய்து, **மேலும் மூன்று** வினாக்களுக்கும் விடை எழுதுக.

(முதலாம் வினாவுக்கு விடையளிப்பதற்கு **ஐரோப்பாவின் புறவுருவப்படம் பகுதி I** உடன் வழங்கப்பட்டுள்ளது.)

## பகுதி A

1. உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள புறவுருவப்படத்தில் கீழே தரப்பட்டுள்ள **எல்லா இடங்களையும் குறித்துப்** பெயரிடுக.

| | | |
|---|---|---|
| (i) கிறீட் | (ii) உரோம் | (iii) போ நதி |
| (iv) வெனிஸ் | (v) போர்த்துக்கல் | (vi) ஆங்கிலக் கால்வாய் |
| (vii) லிவர்பூல் | (viii) அசோவ் கடல் | (ix) பொஸ்பரஸ் நீரிணை |
| (x) விஸ்ரியூலா நதி | (xi) பேர்லின் | (xii) பின்லாந்து |

(சரியாகக் குறித்துப் பெயரிடுவதற்கு **01** புள்ளி வீதம்)

## பகுதி B

2. (i) கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதியில் உரோமர்களிடையே நிலவிய சமய நம்பிக்கைகள் பற்றி விவரிக்குக. (06 புள்ளிகள்)

   (ii) கி.மு. நான்காம் நூற்றாண்டின் இறுதிவரை உரோம சாம்ராச்சியத்தில் கிறிஸ்தவ சமயம் பரவிய முறையினைப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

3. "புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தம் சமயம்சார் காரணங்களால் மட்டுமன்றி அக்காலத்தில் நிலவிய அரசியல், பொருளாதார நிலைமைகளின் ஊடாகவும் உருவாகியது."

   (i) புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தம் ஆரம்பமான நாட்டின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

   (ii) புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தத்தின் தலைவர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

   (iii) மேலே (3) (ii) இற்குரிய தலைவர்களில் **ஒருவரினால்** புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தத்திற்கு வழங்கப்பட்ட பணிகளை விவரிக்குக. (04 புள்ளிகள்)

   (iv) புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தம் ஏற்படுவதற்குக் காரணமான சமய, அரசியல், பொருளாதார காரணிகளைப் பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

[பக். 8 ஐப் பார்க்க

4. (i) அமெரிக்க சுதந்திரப்போர் ஏற்படுவதற்குக் காரணமான அரசியல் பொருளாதாரக் காரணிகளைப் பகுப்பாய்வு செய்க. (12 புள்ளிகள்)

   (ii) அமெரிக்க சுதந்திரப்போரின் வெற்றிக்கான காரணங்களைப் பரிசீலிக்குக. (04 புள்ளிகள்)

5. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

   (i) கிரேக்க தத்துவஞானம்

   (ii) போர்த்துக்கேயர் மேற்கொண்ட நாடுகாண் பயணங்கள்

   (iii) எதிர்மதச் சீர்திருத்தம்

   (iv) மகோன்னத புரட்சி

(08 × 2 = 16 புள்ளிகள்)

## பகுதி C

6. ஜெர்மனியை ஐக்கியப்படுத்தும் இயக்கத்தில் இடம்பெற்ற முக்கிய சந்தர்ப்பங்களில் விசேட கவனம் செலுத்தி அது தொடர்பில் பிஸ்மார்க்கினால் நிறைவேற்றப்பட்ட வகிபாகத்தை பரிசீலிக்குக. (16 புள்ளிகள்)

7. "இரண்டாம் உலகப்போர் ஏற்படுவதற்கான அடிப்படை வித்தினை வேர்சேல் உடன்படிக்கை கொண்டிருந்தது."

   (i) வேர்சேல் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட தோல்வியடைந்த நாட்டின் பெயரைக் குறிப்பிடுக. (01 புள்ளி)

   (ii) வெற்றியடைந்த நேச நாடுகளின் தலைவர்கள் **இருவரின்** பெயர்களைத் தருக. (02 புள்ளிகள்)

   (iii) வேர்சேல் உடன்படிக்கையின் முக்கிய நிபந்தனைகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

   (iv) வேர்சேல் உடன்படிக்கையின் நீண்ட காலத் தாக்கத்தை மதிப்பிட்டு, இரண்டாம் உலகப்போர் ஏற்படுவதற்குக் காரணமான முக்கிய விடயங்களைப் பரிசீலிக்குக. (09 புள்ளிகள்)

8. (i) ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய நோக்கங்கள் யாவை? (06 புள்ளிகள்)

   (ii) 1968 வரை அமைதி பேணும் நிறுவகமாக ஐக்கிய நாடுகள் சபை எவ்வளவுக்கு வெற்றியடைந்துள்ளது என்பதைப் பரிசீலிக்குக. (10 புள்ளிகள்)

9. பின்வரும் தலைப்புகளில் எவையேனும் **இரண்டினது** வரலாற்று முக்கியத்துவம் பற்றிச் சிறுகுறிப்பு எழுதுக.

   (i) வியன்னா மாநாட்டின் முக்கிய அடைவுகள்

   (ii) கமிலோ கவூர்

   (iii) புதிய ஏகாதிபத்தியம் (imperialism)

   (iv) இரண்டாம் உலகப் போரின் விளைவுகள்

(08 × 2 = 16 புள்ளிகள்)

❋ ❋ ❋